**O.S No. : 87/2023**

**DATE : 05.08.2024**

**NAME : கங்காதரன் த/பெ. நடராஜன்**

**பி. வா..சா. 1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி– வாதி தரப்பில்**

**1)** வழக்கு சொத்து மற்றும் இன்னொரு சொத்தும் உயில் முன்னிலைக்கு என் பெயரில் உள்ளது என நான் குறிப்பிட்டு இருப்பதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்து உள்ளேனா எனறால் தாக்கல் செய்யவில்லை. வேறு சொத்தில் சர்வே எண் மற்றும் விஸ்திரனம் தெரியுமா என்றால் அது வழக்கிற்கு சம்பந்தமில்லாத சொத்து. அந்த மற்றொரு சொத்தின் சர்வேஎண் 156/3 ஏ 1 மற்றும் 156/3 பி 1 விஸ்திரனம் 40 சென்ட் என்றால் சரிதான்.

**2)** மேற்படி 40 சென்ட் நிலத்தை என் தாயார் எனக்கும் என் சகோதரர் சகோதரிகளுக்கும் வா.சா. ஆ 2 உயில் முன்னிலைக்கு பிரித்து எழுதி வைத்தார் என்றால் சரிதான். மேற்படி 40 சென்ட் நிலத்தின் அனுபவத்தை அடைந்தேன் என்றால் இல்லை. அதற்காக வழக்கு தாக்கல் செய்ய போகிறேன். மேற்படி என் தாயார் 2007 ஆம் ஆண்டு மேற்படி 40 சென்ட் நிலத்தை சங்கரன் கண்ணன் விஜய ராகவன் பொது அதிகாரம் கொடுத்து கவிதா என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்து விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சாஆ 2 உயில் முன்னிலைக்கு சொத்து எதுவும் என் அனுபவ முன்னிலைக்கு வரவில்லை என்றால் சரிதான்.

3) வழக்கு சொத்திற்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் உயில் ஆவணம் மட்டும் தான் உள்ளது என் தாயார் பெயரில் பட்டா ஆகவில்லை என்றும் என் தங்கை சிவகாமி பெயரில் 3111 என பட்டா ஆகியுள்ளது. வழக்கு 33 சென்ட் சொத்தில்

சிவகாமிக்கு 7 சென்ட் பட்டா போக வேறு யாருக்கு பட்டா ஆகியுள்ளது என்றால் ஜெயசீலன் ,பரமேஸ்வரி, புண்ணியகோட்டி ஆகியோருக்கு பட்டா கொடுத்துள்ளார்கள்.

4) பட்டா எண் 5163 பட்டா யார் பெயரில் இருக்கிறது என்றால் பிரதிவாதிகள் 1 முதல் 3 பெயரில் உள்ளது. சிவகாமியை தவிர்த்து என் தாயார் யார் யாருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஜெயசீலனின் நிலத்தின் ஜக்குபந்திகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எந்த ஆவணத்தின் அடிப்படையில் ஜெயசீலன் சொத்திற்கு பக்கத்தில் என் நிலம் இருக்கிறது என நான் கூறுகிறேன் என்றால் வா.சா ஆ 2 ஆவணத்தில் குறிப்பீட்டுள்ளேன்.

5) எனக்கும் மற்ற சகோதர சகோதரிகள் கொடுக்கப்பட்ட சொத்தில் வா.சா ஆ 2 உயில் ஆவணத்தில் ஜக்குபந்திகள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஜெயசீலன் எந்த ஆவணத்தின் அடிப்படையில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு சொத்தை விற்று விட்டதாக நான் கூறுகிறேன் என்றால் நான் அவ்வாறு கூறவில்லை. நான் 1 முதல் 3 பிரதிவாதிகளின் கிரையம் பெற்ற ஆவணங்களை நான் பாாத்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. சிவகாமியிடம் நான் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எவ்வளவு சொத்தை விற்றேன் என நான் கேட்டேனா என்றால் கேட்க மாட்டேன்.

6) என் சகோதர புண்ணிய கோட்டியின் கையொப்பம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் 30.12.2011 தேதியிட்ட கிரைய பத்திரத்தில் சாட்சிகள் கையொப்பத்தில் உள்ள கையொப்பங்களில் எது என் சகோதரர் கையொப்பம் என்றால் முதல் கையொப்பம் என் சகோதரர் புண்ணியகோட்டியின் கையொப்பம் ஆகும். **மேற்படி புண்ணிய கோட்டியின் கையொப்பம் பி.வா. சா ஆ 1 ஆகம்.**

7) சகோதரியின் சிவகாமியின் கணவர் பெயர் குமார் என்றால் சரிதான். குமாரின் கையொப்பம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 30.12.2011 தேதியிட்ட கிரைய பத்திரத்தில் சாட்சிகள் கையொப்பத்தில் உள்ள கையொப்பங்களில் எது குமாரின் கையொப்பம் என்றால் 2வது கையொப்பம் குமாரின் கையொப்பம் ஆகும். **மேற்படி குமாரின் கையொப்பம் பி.வா. சா ஆ 2 ஆகும்.**

**(1 முதல் 3 பிரதிவாதி தரப்பில் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

**Typewritten by the typist in open court to my dictation and to my bearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct**

**Sd/-P.T.Satheesh Kumar**
**Principal District Court,**
**Kancheepuram**